## பெரிய வியாழன்

## ஆண்டவரின் இராவுணவு

### உடைவது நான் உயிர் பெறுவது நீ

முன்னுரை:

இன்று ஆண்டவரின் இராவுணவு. இருள் ஒளிக்கு விலைபேசிய இரவு. நட்பின் அடையாளமான முத்தத்தால் நட்பையே களங்கப்படுத்திய இரவு. மானிடரின் கைகளில் இறைவன் கட்டுண்ட இரவு. உடன் வந்த சீடர்கள் தெரியாது என்று நகர்ந்த இரவு. இந்த வடிவங்களையும் பரிமாணங்களையும் தாண்டிய இரவு இந்த இரவு.

எகிப்தில் என்மக்கள் படும் துன்பத்தை என் கண்யளால் கண்டேன் என்று இறங்கி வந்த யாவே இறைவன் இஸ்ரயேல் மக்களை எகிப்தின் அடிதைத்தனத்தலீருந்து விடுவிக்க பாஸ்கா கொண்டாடிய விடுதலையின் இரவு இது.''*இது என் உடல் இது என் இரத்தம்*''என நற்கருணையை ஏற்படுத்திய தியாகத்தின் இரவு இது. *இதை என் நினைவாகச் செய்யுஙகள்* என பணிக்குருத்துவத்தை ஏற்படுத்திய அர்ப்பணத்தின் இரவு இது. ''பணிவிடை பெற அன்று பணிவிடை புரியவே'' என்று தம் சீடரின் பாதம் கழுவிய பாலஸ்தீனத்துப் பகலவனின் பண்பின் இரவு. ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் எனும் புதியக் கட்டளையை வழங்கிய அன்பின் இரவு இது.

**இன்றைய திருவழிபாடு 4 பகுதிகளைக் கொண்டது.**

1. இறைவார்த்தை வழிபாடு
2. பாதம் கழுவும் சடங்கு
3. நற்கருணை வழிபாடு
4. நற்கருணை இடமாற்ற பவனி

அன்புக்கட்டளை கொடுக்கப்பட்ட இந்நாளில் நாம் அன்புசெய்யும் அனைவருக்காகவும் செபிப்போம். அன்பால் இவ்வுலகம் மாற்றம் பெற மன்றாடுவோம். பணிக்குருத்துவம் ஏற்படுத்தப்பட்ட இந்நாளில் அருள் நிலையில் இருக்கும் அனைவருக்காகவும் மன்றாடுவோம். பாதம் கழுவும் தலைமைத்துவம் நம் குடும்பத்திலும் திருஅவையிலும் நாட்டிலும் மேலோங்க மன்றாடுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

பாரவோன் மன்னனின் அடிமைத்தனத்திலிருந்து பாலும் தேனும் பொழியும் கானான் நாட்டிற்கு இஸ்ராயேல் மக்களைக் கடத்திச் செல்லும் யாவே இறைவன் பாஸ்கா விருந்துண்ண அழைக்கும் நிகழ்வே இன்றைய முதல் வாசகம். புதிய பாஸ்காவின் மக்களாகிய நாமும் நம் இருளீலிருந்தும் பொய்மையிலிருந்தும் இறப்பிலிருந்தும் கடந்து செல்ல வேண்டும் என்ற இறைவேண்டலோடு இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசகம் 1கொரி11: 23- 26.**

அர்த்தமற்ற வழிபாடுகள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துவதில்லை. வழிபாடுகள் வாழ்வாகும் போதுதான் வாழ்வில் மாற்றம் பிறக்கிறது. வாழ்வு சிறக்கிறது. எனவே திருப்பலியின் போது இயேசுவின் உடலை உண்டு அவரது இரத்தத்தைப் பருகுவது என்பது வெற்றுச் சடங்காக மாறிவிடாமல் நம் அன்றாட வாழ்வில் இறையரசை வாழ்வாக்க வேண்டும் என்ற புனித பவுலின் வாரத்தைக்குச் செவிமடுப்போம்.

**பாதம் கழுவும் சடங்கு**

**முன்னுரை**

வீட்டிற்கு வெளியே சென்ற தன் தலைவன் திரும்பும் போது அவ்வீட்டின் அடிமை அவன் பாதங்களைக் கழுவி வீட்டிற்குள் அழைப்பதும் விருந்தினர்கள் வீட்டிற்குள் வரும் போது அவர்களின் பாதம் கழுவி விருந்தோம்புவதும் யூத மரபு. யூத சமூகத்தில் பிறந்த இயேசு ஒரு வித்தியாசமான செயலைச் செய்கின்றார். தொண்டு ஏற்பதற்கு அல்ல தொண்டு ஆற்றுவதற்கே வந்தேன் என்று வார்த்தையில் மட்டுமல்ல தன் சீடர்களின் பாதம் கழுவி அவ்வாத்தைகளுக்கு உருவம் கொடுத்தார் இயேசு. எனவே இப்பாதம் கழுவும் சடங்கில் பார்வையாளர்களாக, வேடிக்கையாளர்களாக இல்லாமல் நாம் சாதி, மதம், இனம், தூய்மை தீட்டு, ஏழை பணக்காரன், இருப்பவர் இல்லாதவர் போன்ற மனிதத்தை உருக்குலைக்கும் வேற்றுமைகளைக் களைந்து அருகில் வாழும் மனிதர் இறைவனின் படைப்பு,சாயல் என்பதை உணர்ந்து இச்சடங்கில் பங்குபெறுவோம்.

**மன்றாட்டுக்கள்**

1. இஸ்ராயேல் மக்களின் பழைய பாஸ்காவும், இயேசுவின் புதிய பாஸ்காவும் இணையும் இந்நாளில் பாஸ்கா நிகழ்வு குறித்துக் காட்டும் உடன்படிக்கை உறவை நாங்கள் உம்மோடும், எம் சகோதர. சகோதரிகளோடும், இயற்கையோடும் புதுப்பித்துக் கொள்ள வரம் தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. தியாகச் சிகரமே இறைவா உம் திருமகன் தம்மையே தியாகப்பலியாக்கி நற்கருணையை ஏற்படுத்திய இந்நாளில் நற்கருணைக் குறித்துக் காட்டும் தியாகம், ஒருமைப்பாடு, கூட்டுமுயற்ச்சியை நாங்கள் உணர்ந்து வாழ வரம் தர உம்மை மன்றாடுகிறோம்.

3. பணியின் பகலவனே இறவைா உம் திருமகன் பணிக்குருத்துவத்தை ஏற்ப்படுத்திய இந்நாளில் பணிக்குருத்துவத்தில் பங்கேற்கும் எம் திருத்தந்தை,ஆயர்கள், குருக்கள். துறவியர் தங்கள் வாழ்வாலும், பணியாலும் உம் திருமகனின் இறையாட்சி விழுமியங்க்ளைப் பிரதிபலிக்க. நம்புவதை எடுத்துரைக்க, எடுத்துரைப்பதை வாழ்ந்துகாட்ட வரம் தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. உம் திருமகன் தம் சீடரின் பாதங்களைக் கழுவிய இந்நாளில் எம் பணியிடங்களிலும், வாழ்விடங்களிலும். மற்றவர்களை மதித்து. அன்பு பாராட்டி. எம் உடன்பிறப்புக்கள் போன்று ஒருவருக்கொருவர் உளங்கனிந்த அன்பு காட்ட உமது ஆசியை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. புதியக்கட்டளையை உம் மகன் வழங்கிய இந்நாளில் அன்பைக் கொடுக்கும். ஆன்பிற்காய் ஏங்கும். அன்பை மறுக்கும் அனைவரும் அன்பை தம் வாழ்வில் என்றென்றும் ஏற்று நிறைவு காண வரம் தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## நற்கருணை வழிபாடு

**காணிக்கைப் பவனி**

அன்பும் நட்பும் எங்குள்ளதோ….

**நற்கருணை இடமாற்ற பவனி**

**பவனி அமைப்பு**

1. சிலுவை தாங்குபவர்

2.தூபப் பணியாளர் சாம்பிராணி ஏந்துபவர்

3.தரி தாங்குபவர் குரு தரி தாங்குபவர்

**பாடல்**: பாடுவாய் என் நாவே…

## ஆண்டவரின திருப்பாடுகள்

## புனித வெள்ளி

பொது முன்னுரை

இன்று கிறிஸ்தவர்களுக்கான காதலர் தினம்.இயேசு சிலுவையிலிருந்து தன் அன்பைச் சொல்கிறார். சொன்னதோடு மட்டுமன்றி சிலுவைச் சாவினால் தன்அன்பை எண்பிக்கிறார். இதுவல்லவோ அன்பு என்று காண்பவரையெல்லாம் தன்அன்புக்குச் சாட்சியாகத் தன்சிலுவைச் சாவை விட்டுச் செல்கிறார். நாம் எப்படி வாழ வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தது இவரது வாழ்வு. நாம் எப்படி இறக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தது இவரது இறப்பு என்ற கூற்று இயேசுவைப் பொறுத்தவரை அது எவ்வளவு பெரிய உண்மை.

வாழ்வு என்பது பிறரது வளர்ச்சிக்காக, இறப்பு என்பது பிறரது வாழ்வுக்காக என்ற புதியப் படிப்பினையைக் கற்றுத் தருகிறார் இயேசு. பிறருக்காக இறப்பதே இறப்பு என்று அழுத்தமாகக் கூறி இறப்புக்குள் குடிகொண்டிருந்த வெறுமையை விரட்டுகிறார். பிறர் நலனுக்காக நாம் சிந்தும் ஒவ்வொரு துளிக்கண்ணீரும், வியர்வைத்துளியும் விலைமதிப்பற்றது என்று இயேசுவிடமிருந்து கற்றுக் கொண்ட நாளே புனித வெள்ளி.

சிலுவையிலிருந்து தன் காதலைச் சொன்ன இயேசுவுக்கு இன்னும் நாம் பதில் தரவில்லை.பலவேளைகளில் நமது பாவங்கள் அவரை மீண்டும் மீண்டும் அறைந்து விடுகின்றன. புனித வெள்ளியை துயரம் நிறைந்த நாளாக மாற்றியது சிலுவைச் சாவு மட்டுமல்ல, நம்முடைய பாவங்களும்தான். நம்முடைய அன்பை, தியாகச் செயல்பாடுகளால் வெளிப்படுத்தவும், நம் பாவங்களால் அவரை

சிலுவையில் அறைந்தக் குற்றத்திற்காக மன்னிப்பு வேண்டியும் இன்றைய வழிபாட்டில் பங்கேற்போம்.

**இன்றைய வழிபாடு 4 பகுதிகளைக் கொண்டது.**

1. இறைவார்த்தை வழிபாடு
2. மன்றாட்டுக்கள்
3. திருச்சிலுவை ஆராதனை
4. திருவிருந்துச் சடங்கு

1. இறைவாாத்தை வழிபாடு

முதல் வாசக முன்னுரை

மனிதர்கள் மீது கொண்ட அன்பினால் மனுக்குலத்தோடு தன்னை ஒன்றித்துக்கொண்ட இயேசு, இன்று அதே அன்புக்காகத் துன்புறுகிறார். மனிதர்கள் மீது தான்கொண்ட அன்பு எல்லையற்றது என்பதை எண்பித்த இயேசுவின் சிலுசைச் சாவு. துன்பம். கிண்டல். கேலி. அவமானம். இரத்தம் சிந்துதல் என அனைத்தும் நமக்காகவும், நம் பாவங்களுக்காகவும் அவர் மனமுவந்து ஏற்றுக் கொண்டவையே. கடவுளாய் இருந்த அவர் நமக்காகத் துன்புறும் இயேசுவின் அன்பை இறைவாக்கினர் எசாயாவின் வார்த்தைகளில் கேட்போம்.

இரண்டாம் வாசக முன்னுரை

இயேசு நம் தனிப்பெரும் தலைமைக்குரு. நமக்காகப் பலி செலுத்திய தலைமைக்குரு மட்டுமல்ல, நமக்காகப் பலியான தலைமைக் குருவும் அவரே. இறைத்துணையோடு துன்பங்களை எதிர்கொண்டு அந்த கல்வாரிப் பலியின் வழியாக நம் அனைவருக்காகவும் மீட்பைக் கொடுத்தார். இறைத்திட்டத்திற்குப் பணிந்து நமக்காகப் பலி செலுத்திய நம் இயேசுவின் தியாகத்தை தூய பவுல் அடிகளாரின் வார்த்தைகளில் கேட்போம்.

நற்செய்திக்கு முன் வசனம் - கிறிஸ்து தம்மை

**மறையுரை**

**விசுவாசிகள் மன்றாட்டுக்கள்**

திருத்தொண்டர் - கருத்து

மக்கள் - ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

குரு - கருத்து (மன்றாடுவோமாக)

மக்கள் -ஆமென்

திருச்சிலுவை ஆராதனை

தொடக்கத்தில் மரம் மனிதனுக்குத் தோல்வியைக் கொணர்ந்தது. இயேசுவின் சிலுவை மரம் வெற்றியைப் பெற்றுத் தந்தது. சாவைக் கொணர்ந்த மரம் தேடுகிறார்கள். ஆனால் நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பறைசாற்றுகிறோம். அவமானத்தின், அழுகையின் சின்னமான சிலுவை இயேசுவில் மகிமைப்பெற்றது. இறையன்பையும், பிறரன்பையும் இணைத்து இறைவனுக்கும், மனிதருக்கும் இடையே இணைப்புக் கோடாக நின்றது. பாலைநிலத்தில் மோசேயால் பாம்பு உயர்த்தப்பட்டது போல மானிட மகனும் உயர்த்தப்பட வேண்டும் என்ற வாக்குப்படி உயர்த்தப்பட்ட நம் ஆண்டவரை இன்று உற்றுப் பார்ப்போம். ஆண்டவரின் சிலுவையில் மட்டுமே நான் பெருமை பாராட்டுவேன் என்ற பவுலடியாரின் வார்த்தைகள் நம் வாழ்வாகட்டும். இப்போது குரு திருச்சிலுவையைக் கையிலேந்தி *திருச்சிலுவை மரமிதோ* என்று மும்முறைப் பாட *வருவீர் ஆராதிப்போம்* என அனைவரும் பதில் பாடுவோம்.

பகுதி 3 திருவிருந்து நடைபெறும்

## ஆண்டவரின் உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு

முன்னுரை

தீய வாழ்வுமுறைகளிலிருந்து நன்மைநிறைந்த வாழ்வுக்கும், சாவிலிருந்து வாழ்வுக்கும், உண்மைவாழ்வுக்கும் நம்மை அழைத்துச் செல்லும் நிகழ்வே இன்று நாம் கொண்டாடும் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா. அன்று இஸ்ராயேல் மக்களை இவ்விரவில்தான் பாரவோனின் வலியபுயத்திலிருந்து விடுதலை அளித்து அவர்களை ஒளிக்கும், வாழ்வுக்கும், உண்மைக்கும் அழைத்துச் செல்கின்றார். ஆண்டவர்தான் உலக மக்கள் அனைவருக்கும் ஒளியாக வாழ்வாக உண்மையாக விளங்குகின்றார் என்ற செய்தியை இஸ்ராயேல் மக்களின் விடுதலைப் பயணம் உணர்த்தியது. இவ்வாறு வரலாற்றில் செயல்பட்ட இறைவன்

தன் ஒரே மகனையே உலகிற்கு அனுப்பி உலகமக்கள் அனைவரையும் மீட்கத் திருவுளம் கொண்டார். அந்த இறைமகன் தனக்கு ஏற்பட்ட அனைத்து எதிர்ப்புக்களையும் மீறி தனக்கு இழைக்கப்பட்ட மிகக் கொடூரமான பாடுகளை துணிவோடு ஏற்று தன்னுயிரைத் தந்து மனுக்குலத்தை மீட்டார். ஆண்டவர் இயேசு தனக்கு ஏற்பட்ட கொடூரச்சாவை உயிர்த்தெழுதலின் மூலம் வெற்றி கொண்ட இரவைக் கொண்டாடவே குழுமியுள்ளோம். நாம் அனைவரும் இறைவன் தந்த மீட்பை நமதாக்க வேண்டும் என்ற ஆழமான உணர்வோடு இத்திருச்சடங்கில் பங்கு பெறுவோம்.

**இன்றைய வழிபாடு 4 பகுதிகளைக் கொண்டது.**

1. திருஒளி வழிபாடு
2. இறைவாக்கு வழிபாடு
3. திருமுழுக்கு வழிபாடு
4. நற்கருணை வழிபாடு

**1. ஒளிவழிபாடு**

முன்னுரை

படைப்பின் தொடக்கத்தில் இருள் பரவியிருந்த இடத்தில் *ஒளி உண்டாகுக* என்று ˙ சொல்ல ஒளி உண்டாயிற்று. ஒளி உயிரின் அடையாளம் இறைவனின் அடையாளம். ஆண்டவரே என் ஒளியாய் இருக்கிறார். வாழ்வு தரும் மீட்பராக வருகிறார் என்ற திருப்பாடல் வரிகள் காட்டுவது போல இறைவன் ஒளியாக இருக்கிறார். இஸ்ராயேல் மக்கள் செங்கடலைக் கடந்த அந்த இரவில் நெருப்புத்தூண் வழியாக நடக்கின்றார் இறைவன். இப்போது ஏந்தி வரப்படும் பாஸ்காத்திரி கிறிஸ்துவை ஒளியாக அடையாளப்படுத்துகிறது. இப்போது ஆலய விளக்குகள் அணைக்கப்பட்டிருக்கும். குரு,*கிறிஸ்துவின் ஒளி இதோ* என்று பாட *இறைவனுக்கு நன்றி* என்று பாடுவோம். 2-வது முறை *கிறிஸ்துவின் ஒளி இதோ* என்று பாடிய பின் அனைவரும்திரிகளைப்பற்ற வைப்பர். பவனியாகச் செல்வர். 3-வது முறை பாடிய பின் கோவில் விளக்குகள் ஏற்றப்படுகன்றன.

பாஸ்கா புகழுரை முன்னுரை

வரலாற்றில் இறைவன், இஸ்ராயேல் மக்களோடு உடனிருந்ததையும்,கிறிஸ்து வழியாக புதிய இஸ்ராயேல்இனத்தை இறைவன் உருவாக்கியதையும். ஆதாமின்

பாவம் புதிய ஆதாமாகிய கிறிஸ்துவில் கழுவப்படுவதையும் வாழ்வின் ஆதாரமாக இறைவன் இருக்கின்றார் என்பதையும் பாஸ்காப் பாடலாகப் பாடக் கேட்போம். நன்றிப்பெருக்கோடு எரியும் திரிகளோடு நிற்போம்.

**இறைவாக்கு வழிபாடு**

முதல் வாசக முன்னுரை  தொ.நூல் 1:1-2: 2

இறைவன் வாழ்கிறார் என்பதற்கு அவரின் எழில்மிகுந்த படைப்புக்களே சான்று. ஒளி, வானம், நிலம், புற்பூண்டுகள், ஒளிப்பிழம்புகள், உயிரினங்கள் எனப் படைத்த இறைவன் அனைத்தையும் நல்லதெனக் கண்டார். படைப்பின் சிகரமான மனிதனைத் தனது சாயலில் படைத்தப் பின்பு மிகவும் நல்லதெனக் கண்டார். அனைத்தையும் நல்லதெனக் கண்டார் என்ற சொன்னால் நாம் தூய்மை தீட்டு என்று வேறுபாடு பார்ப்பதும், இயற்கையை அழிப்பதும் இறைவன் பார்வையில் முற்றிலும் தவறு. நாம் இறைவனின் சாயலைப் பெற்றவர்கள் என்றும் இயற்கையின்பால் பொறுப்புடன் வாழ வேண்டிய வரம் வேண்டியவர்களாக வாசகத்திற்கு செவிமடுப்போம்.

2-வது வாசக முன்னுரை

இறைவன் மனிதனின் கூக்குரல் கேட்டு விடுதலை அளிப்பவர் என்பதை இஸ்ரயேல் மக்கள் செங்கடலைக் கடக்கும் இந்த இரவு அனுபவத்தில் உணர்ந்தனர். *அஞ்சாதீர்கள், நிலைகுலையாதீர்கள். இன்று உங்களுக்காகப் போரிடும்* இறைவன் இஸ்ராயேல் மக்கள் சார்பாக இருப்பதைக் குறித்துக் காட்டும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

மூன்றாம் வாசக முன்னுரை

இஸ்ராயேல் மக்கள் பெறுகின்ற புதுவாழ்வை எடுத்துரைக்கின்றார் எசாயா இறைவாக்கினர். தூயநீர், புதியஇதயம், புதியஆவி என அனைத்தையும் புதுப்பிக்கும் இறைவன் புதிய உடன்படிக்கைக்கு அவர்களைத் தயாரிக்கின்றார். நாம் ஆண்டவரில் இணையும் போது நாமும் புதிய உடன்படிக்கையின் மக்களாவோம் என்பதை உணர்ந்து இவ்வாசகத்தைக் கேட்போம்.

நான்காம் வாசக முன்னுரை

திருமுழுக்கின் வழியாக நாம் ஆண்டவருக்குள் இணைந்து நமது பழைய இயல்புகளைக் களைந்து புதுவாழ்விற்கு உயர்கிறோம் என்ற மறையுண்மையை தூய பவுல் விளக்குகிறார். திருமுழுக்கின் அருளுக்காக நன்றி கூறி , அது விடுக்கும் கடமையை உணர்ந்து வாழ இவ்வாசகத்தைக் கேட்போம்.

திருமுழுக்கு வழிபாடு

நோவாகாலத்துத் தண்ணீர் நல்லவர்களுக்கு மீட்பாகவும், தவறியவர்களுக்கு அழிவாகவும் இருந்தது. செங்கடலீன் தண்ணீர் இஸ்ராயேலருக்கு விடுதலையைக் கொணர்ந்தது. யோர்தான் நதியில் கிறிஸ்து புனிதப்படுத்திய தண்ணீர் இன்றும் நமக்குப் புதுவாழ்வு தருகின்றது. திருஅவை இன்று நமது திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பிக்க அழைக்கின்றது. தொடக்கத்திருஅவையில் இன்றைய தினம் திருமுழுக்கின் நாளாகக் கொண்டாடப்பட்டது. திருமுழுக்கு நம் பாவக்கறைகளைப் போக்கி புதிய வாழ்வுக்குள் பிறக்க வைக்கின்றது. இதன்வழியாகவே நாம் கிறிஸ்துவின் மறையுடலின் உறுப்பினர்களாகின்றோம். ஏரிகின்ற திரிகளோடு நம் தீருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பிப்போம். கிறிஸ்துவின் உயிர்ப்பில் பங்கேற்போம்.

மன்றாட்டுக்கள்

1. தாயும் தந்தையுமான இறைவா கிறஸ்துவின் மறையுடலாம் திருஅவை அருள்நிலை, பொதுநிலை சகோதர, சகோதரிகள் தங்களையே வெற்றுப் பாத்திரமாக உம்முன் நிறுத்தி, உம்மால் நிரப்பப்படவும்,அருளுக்குமேல் அருள் பெற்று உயிர்ப்பின் மகிழ்ச்சியை, நம்பிக்கையை வழங்குகின்ற அருட்கலங்களாக மாற்ற உம்மை மன்றாடுகிறோம்.

2. படைப்பு, மீட்பு, மறுபிறப்பு என்று அன்றாடம் உருமாறும் இவ்வுலகத்தில், மக்கள்,வாழ்வு தரும் தண்ணீராக ஒருவர் மற்றவருக்கு தம்மையே வழங்கி எல்லாரும் எல்லாமும் பெற்று நிறைவாழ்வு, நிலைவாழ்வு உம் திருமகனின் உயிர்ப்பில் உறுதிபெற உம்மை மன்றாடுகிறோம்.

3. சாவு என்ற எதிரி,பாவம் என்ற எதிரி,இருள் என்ற எதிரி அழிந்த இந்நாளில் இங்கே கூடியிருக்கும் எங்கள் அனைவருக்கும் வாழ்வு, நன்மைத்தனம், ஒளி என்ற நறுமணத் தைலத்தால் பூசி அருள்பொழிவு செய்ய உம்மை மன்றாடுகிறோம்.

4. உம் திருமகனின் உயிர்ப்பின் வழியாக நீர் வாழ்வோரின் கடவுள் என்ற உம் பெயரின் பொருளை நாங்கள் உணர்கின்றோம். எங்கள் சமூகத்தை, நாட்டை ஆட்டுவிக்கும் இறப்பின் காரணிகளையும், சக்திகளையும் அழித்து எங்களுக்கு உம் நீதியை வழங்க உம்மை மன்றாடுகிறோம்.

5. ஒளியாம் இறைவா நாங்கள் எங்கள் பிஞ்சுக்கரங்களில் தாங்கிக் கொண்டிருக்கும் எம் சின்ன சின்ன மெழுகுதிரிகளை உம் நிலவொளியோடு இணைத்து தொடர்ந்து ஒளி தர, கனி தர,வாழ்வு தர எங்களை வழிகாட்ட உம்மை மன்றாடுகிறோம்.

**பெரிய வியாழன் நிகழ்வுகள்**

1. பொது முன்னுரை
2. வருகைப் பாடல்
3. உன்னதங்களிலே நடனம்
4. முதல் வாசக முன்னுரை
5. முதல் வாசகம்
6. 2 வாசக முன்னுரை
7. 2 வாசகம்
8. நற்செயதிக்கு முன் வசனம்
9. மறையுரை
10. பாதம் கழுவும் சடங்கு
11. விசுவாசிகள் மன்றாட்டு
12. காணிக்கைப் பவனி சிறுவர், இளையோர், பெற்றோர்.
13. நற்கருனை சுற்றுப்பவனி
14. சமபந்தி விருந்து

**தேவையான ஏற்பாடுகள்**

1. துண்டு 2
2. வேட்டி 12
3. பிரட் பாக்கெட் 12
4. குவளையில் தண்ணீர்
5. திருமேனித் துகில்
6. நற்கருணைத் தட்டுகள்